# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2209/44 - 2021 ජනවාරි මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.01.07

*2209/44 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *மதுவரிக் கட்டளைச் சட்டம்*

*மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2021*

*திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இவ்வறிவித்தல் மூலம் 2018, சனவரி மாதம் 18 ஆந் திகதிய 2054/41 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 03/2018 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தலின் அட்டவணையில் இல. 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளில் விற்பனை நேரங்கள் 2021, சனவரி மாதம் 07 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப் பெறும் வகையில், கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விற்பனை நேரங்களைக் கொண்டு திருத்தியமைக்கப்படுவதாக பிரகடனப்படுத்துகிறேன்.*

*2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதிய 2075/24 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 11/2018 இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2021, சனவரி 07.*

**அட்டவணை**

| | I ஆம் நிரல் | II ஆம் நிரல் |
|---|---|---|
| | **உரிம வகை** | **திறந்திருக்கவேண்டிய நேரங்கள்** |
| 2. | (i) கள்ளுத் தவறணை | மு. ப. 10.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை மற்றும் பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 9.00 மணி வரை |
| | (ii) கள்ளுத் தவரணை (கூட்டுறவு முறையின் கீழ் செயற்படும்) | மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 9.00 மணி வரை |

02. பொருள்கோடல் : "கூட்டுறவு முறையின் கீழ்" என்பது, மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது கொத்தணிகள் என கருத்திற் கொள்ளப்படுகிறது.

01-557

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.